தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*******

ஆணை எண். 224/ந/2022
நாள். 14.12.2022

திரு. இரா. சோணைமுத்து,
சிவகங்கை. – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
சிவகங்கை நகராட்சி. – எதிர்மனுதாரர்

சிவகங்கை, தாகூர் தெரு, கதவு எண். 34/18 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. இரா. சோணைமுத்து என்பவரின் 10.11.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 15.11.2022 அன்று பெறப்பட்டு 224/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சிவகங்கை, தாகூர் தெரு, கதவு எண். 34/18 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. இரா. சோணைமுத்து என்பவர் தனது மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

“சிவகங்கை நகராட்சியில் துப்புரவு பணியாளர்கள் மற்றும் அலுவலர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்த பணத்தின் மூலம், நகராட்சி பொது நிதியில், வேலை செய்த ஒப்பந்ததாரர்களுக்கு பட்டியல் தொகை வழங்கி அதிகாரிகள் பயன் பெற்றுள்ளனர். இதனால் தற்போது நான்கு ஊழியர்கள் பணி நிறைவுபெற்று எந்த ஒரு பணப்பலனும் பெறமுடியாமல் உள்ளனர். பிடித்தம் செய்த பணத்தை முறையாக செலுத்தாத அதிகாரிகள் மீது எந்தவொரு ஒழுங்கு நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை. எனவே, தாங்கள் கீழ்கண்ட குற்றச்சாட்டை விசாரித்து நடவடிக்கை எடுக்கவும்:–

1) சிவகங்கை நகராட்சி துப்புரவு பணியாளர்கள் R.S. 845 கூட்டுறவு சிக்கன நாணய சங்கத்தில் வாங்கிய கடனுக்காக சிவகங்கை நகராட்சி துப்புரவு பணியாளர்கள் 55 நபர்களின் ஊதியத்தில் 30.09.2022–ம் தேதி வரை பிடித்தம் செய்த தொகை ரூ.51,38,984/–ஐ மேற்படி கூட்டுறவு சங்கத்திற்கு செலுத்தாமல் முறைகேடு செய்துள்ளனர்.

2) சிவகங்கை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் தனியார் மூலம் துப்புரவு பணி மேற்கொள்ளும் பணியாளர்கள் மற்றும் அம்மா உணவகத்தில் பணிபுரியும் மகளிர் சுயஉதவி குழுவினர்களின் ஊதியத்தில் வருங்கால வைப்புநிதிக்காக பிடித்தம் செய்த

ரூ.46,22,199/–ஐ வருங்கால வைப்புநிதி ஆணையத்தில் செலுத்தாமல் முறைகேடு செய்துள்ளனர்.

3) சிவகங்கை நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள் மேற்கொள்ளும் பணியில், பட்டியல் தொகை வழங்கும்போது வருமானவரியாக 30.09.2022–ம் தேதி வரை பிடித்தம் செய்த ரூ.39,72,960/–ஐ, மதுரை –வருமானவரி முதன்மை ஆணையர் அலுவலகத்தில் செலுத்தாமல் முறைகேடு செய்துள்ளனர்.

4) சிவகங்கை நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் ஊதியத்தில் ஒய்வூதிய திட்டம் மற்றும் பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்திற்காக பிடித்தம் செய்த தொகை மற்றும் நகராட்சி பங்குத்தொகை 30.09.2022 வரை ரூ.3,59,99,000/–ஐ மாவட்ட கருவூலத்தில் செலுத்தாமல் முறைகேடு செய்துள்ளனர்.

5) சிவகங்கை நகராட்சி பணியாளர்கள் மற்றும் துப்புரவு ஊழியர்களின் ஊதியத்தில் 30.09.2022–ம் தேதி வரை சேம நலநிதிக்காக பிடித்தம் செய்த ரூ. 63,25,404/–ஐ சேமநல நிதி அலுவலகத்தில் செலுத்தாமல் முறைகேடு செய்துள்ளனர்.

மேற்படி ரூ.5,60,58,547/– நகராட்சி பணியாளர்களின் நிதியை நகராட்சி ஆணையாளர், பொறியாளர், மேலாளர் மற்றும் கணக்கர் ஆகியோர் கூட்டாக சேர்ந்து முறைகேடு செய்துள்ளனர். எனவே, மேற்படி நபர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து, நகராட்சி பணியாளர்களின் வாழ்வாதாரத்திற்கு உதவிடுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 21.11.2022 நாளிட்ட கடிதம் மூலம் சிவகங்கை நகராட்சி ஆணையரிடம் அறிக்கை கோரப்பட்டது. சிவகங்கை நகராட்சி ஆணையர் தனது 30.11.2022 நாளிட்ட அறிக்கையில் பின்வரும் விவரங்களை தெரிவித்துள்ளார்:

''சிவகங்கை நகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் மாத ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட கீழ்கண்ட இனங்கள் திரும்ப செலுத்தப்படாமல் நிலுவையாக இருந்து வருகிறது.

| வ. எண். | இனம் | திரும்ப செலுத்தாமல் உள்ள காரணம் | நிலுவைத் தொகை |
|---|---|---|---|
| 1 | R.S. 845 கூட்டுறவு சிக்கன நாணயச் சங்கம், சிவகங்கை | 01.07.2021 முதல் 30.09.2022 முடிய | ரூ 51,38,984/– |
| 2 | வருங்கால வைப்பு நிதி. | 2015–2016 முதல் 30.09.2022 முடிய | ரூ 46,22,199/– |
| 3 | வருமான வரி | 2020–2021 முதல் 30.09.2022 முடிய | ரூ 39,72,966/– |
| 4 | பங்களிப்பு ஓய்வூதிய பிடித்தம் மற்றும் நகராட்சி பங்களிப்பு தொகை | 01.04.2003 முதல் 30.09.2022 முடிய | ரூ 3,59,99,000/– |
| 5 | சேமநல நிதி | 2021–2022 முதல் 30.09.2022 முடிய | ரூ 63,25,404/– |

மேலே இனம் –1ல் கண்ட நிலுவைத் தொகையில் R.S. 845 கூட்டுறவு சிக்கன நாணய சங்கத்திற்கு பிடித்தம் செய்யப்பட்ட தொகை ரூ 9,06,548/– கீழ்கண்டவாறு செலுத்தப்பட்டுள்ளது:–

| வ. எண். | பட்டியல் எண் / நாள் | தொகை |
|---|---|---|
| 1 | 181 / 19.07.2022 | ரூ.2,12,951/– |
| 2 | 182 / 19.07.2022 | ரூ.11,440/– |
| 3 | 183 / 19.07.2022 | ரூ.1,64,176/– |
| 4 | 35 / 19.07.2022 | ரூ.15,780/– |
| 5 | 274 / 06.09.2022 | ரூ.28,065/– |
| 6 | 275 / 06.09.2022 | ரூ33,535/– |
| 7 | 276 / 06.09.2022 | ரூ.14,110/– |
| 8 | 284 / 07.09.2022 | ரூ.1,76,280/– |
| 9 | 285 / 07.09.2022 | ரூ.1,63,281/– |
| 10 | 286 / 07.09.2022 | ரூ.14,110/– |
| 11 | 287 / 07.09.2022 | ரூ.17,535/– |
| 12 | 288 / 07.09.2022 | ரூ.28,065/– |
| 13 | 289 / 07.09.2022 | ரூ.11,440/– |
| 14 | 53 / 07.09.2022 | ரூ.15,780/– |
| | மொத்தம் | ரூ.9,06,548/– |

இனம் எண்.2ல் கண்ட வருங்கால வைப்பு நிதி தொகை இந்நகராட்சியில் பாரத மாநில வங்கியில் பராமரிக்கும் கணக்கு எண்.11078527004–லிருந்து நகராட்சி அலுவலகத்திற்கு எந்தவித தகவலும் தெரிவிக்காமல் பிடித்தம் செய்து மதுரை வருங்கால வைப்புநிதி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதாக வங்கி மேலாளர் தெரிவித்தார்.

| | |
|---|---|
| 30.05.2022 | ரூ 23,00,000/– |
| 30.06.2022 | ரூ 10,92,590/– |
| 03.10.2022 | ரூ 12,37,791/– |
| மொத்தம் | ரூ 46,30,381/– |

மேற்கண்ட தொகையை பிடித்தம் செய்தது தொடர்பாக மதுரை வருங்கால வைப்புநிதி அலுவலகத்தை 17.11.2022–ல் தொடர்பு கொண்டு உறுதி செய்யப்பட்டது. மேற்கண்ட தொகையை அலுவலகத்திற்கு வங்கியிலிருந்து எந்தவித தகவலும் தெரிவிக்காமல் பிடித்தம் செய்யப்பட்டது உறுதி செய்யப்படாமல் இருந்ததால் திரு.இரா.சோணைமுத்து, சிவகங்கை என்பவரின் 03.10.2022–ம் தேதிய தகவல் அறியும் உரிமைச் சட்ட மனுவில் கோரிய தகவலில் பதில் அளிக்க இயலவில்லை.

இனம் எண்.3ல் ஒப்பந்ததாரர்களின் பட்டியல் தொகையில் பிடித்தம் செய்யப்பட்ட வருமான வரித் தொகை 2020–2021 ஆம் ஆண்டிற்கு ரூ 17,08,608/– 15.11.2022–ல் செலுத்தப்பட்டுள்ளது.

இந்நகராட்சியின் வரவு செலவு கடந்த சில ஆண்டுகளாக பற்றாக்குறையாக இருந்து வருகிறது. 2020–2021 ஆம் ஆண்டிற்கு தணிக்கை செய்யப்பட்ட அறிக்கையின்படி வரவு ரூ.11,73,78,444/– ஆகவும், செலவு ரூ.16,63,60,997/– ஆகவும், ரூ.4,89,82,553/– பற்றாக்குறையாகவும் உள்ளது. 2021–2022 ஆம் ஆண்டிற்கு வரவு ரூ.8,50,74,000/– ஆகவும் செலவு ரூ.14,63,55,000/– ஆகவும், ரூ.6,12,81,000/– பற்றாக்குறையாகவும் உள்ளது.

இந்நகராட்சியில் ஒவ்வொரு ஆண்டிற்கும் பட்ஜெட் தயார் செய்யப்பட்டு மன்ற ஒப்புதல் பெறப்பட்டு செலவு செய்யப்பட்டு வருகிறது. பொதுமக்களுக்கு செய்து கொடுக்க வேண்டிய அத்தியாவசிய பணிகளின் காரணமாக செலவுகள் கூடுதலாக வருகிறது.

இந்நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் நலன் கருதி ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட தொகைகளை மேற்கண்டவாறு உள்ள இனம் 1,2,3 திரும்ப செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதன்படி, அனைத்து இனங்களுக்கும் மாதந்தோறும் நிதி நிலைக்கு ஏற்ப திரும்ப செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

3) மனுதாரரும் மற்றும் சிவகங்கை நகராட்சி ஆணையரும் 01.12.2022 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 24.11.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4) மனுதாரர் திரு. இரா. சோணைமுத்து என்பவர் 01.12.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை.

5) எதிர்மனுதாரரான சிவகங்கை நகராட்சி பொறியாளராகவும் மற்றும் ஆணையாளராகவும் (பொ) பணியாற்றும் திருமதி.எஸ்.பாண்டீஸ்வரி மற்றும் இளநிலை உதவியாளராக பணியாற்றும் திரு.துரை பூமிநாதன் ஆகியோர் 01.12.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்:

''சிவகங்கை நகராட்சியில் தணிக்கை செய்யப்பட்ட அறிக்கையின்படி வருமானம் சுமார் ரூ.11/– கோடியாகும். ஆனால், செலவினம் சுமார் ரூ.16/– கோடியாகும். பற்றாக்குறை சுமார் ரூ.5/– கோடியாகும். எனவே, நகராட்சியில் ஏற்பட்டுள்ள நிதி பற்றாக்குறையை போக்கிடும் பொருட்டு ஊழியர்களின் சேமநல நிதி மற்றும் வருங்கால வைப்புநிதி போன்றவற்றை நகராட்சியின் அவசர மற்றும் அத்தியாவசியப் பணிகளுக்கு சிவகங்கை நகராட்சி பயன்படுத்திக்கொண்டது. ஊழியர்களின் பங்களிப்பு ஒய்வூதியத்தொகையான ரூ. 3.60 கோடியும், சேமநல நிதியான ரூ.63,25,404/–ம் சிவகங்கை நகராட்சியில் ஏற்பட்டுள்ள செலவினங்களுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள R.S 845 கூட்டுறவு சிக்கன நாணய சங்கத்திற்கு நிலுவைத் தொகையான ரூ.51,38,984/–ல் ரூ.9,06,548/– செலுத்தப்பட்டுள்ளது. அதே போன்று 2021–22ம் ஆண்டிற்கான வருமான வரித் தொகையாக கடந்த 15.11.2022 அன்று ரூ.17,08,608/– செலுத்தப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

சிவகங்கை நகராட்சியில் பற்றாக்குறை நிலையினை தெரிவித்து நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு 18.07.2022 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் நகராட்சி மண்டல இயக்குநர் ஆகியோரின் அறிவுரையின்படி சொத்துவரி போன்ற வரியினங்களில் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு, வரி வசூல் செய்யப்படுகிறது. மேற்கண்ட வரி வசூலின் மூலம், தொழிலாளர்களுக்கு சேர வேண்டிய பங்களிப்பு ஓய்வூதியம், வருங்கால வைப்பு நிதி போன்றவை செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மனுதாரர் தெரிவித்துள்ளவாறு நகராட்சி அலுவலர்களாலோ அல்லது பணியாளர்களாலோ மனுதாரரை மிரட்டவில்லை. மாறாக சிவகங்கை நகராட்சியின் ஒப்பந்ததாரர்களில் ஒருவரான மனுதாரர்தான் நகராட்சி அலுவலர்களை மிரட்டி வருகிறார் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் நகராட்சிப் பொறியாளர் மற்றும் ஆணையாளரான (பொறுப்பு) எனது 30.11.2022 நாளிட்ட இம்முறை மன்றத்திற்கு சமர்ப்பித்துள்ள கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்'' என தெரிவித்துள்ளார்.

6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, சிவகங்கை நகராட்சி ஆணையரின் அறிக்கை, வாக்குமூலம் மற்றும் இளநிலை உதவியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

சிவகங்கை மாவட்டம், சிவகங்கையைச் சார்ந்த மனுதாரர் திரு. இரா. சோணைமுத்து என்பவர் தனது 10.11.2022 நாளிட்ட முறையீட்டு மனுவில் சிவகங்கை நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்த தொகைகள் மற்றும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து பிடித்தம் செய்த வருமானவரி தொகைகள் என கீழ்காணும் மொத்தம் ரூ.6.70 கோடி தொகையினை சிவகங்கை நகராட்சி அலுவலர்கள் உரிய கணக்குகளில் செலுத்தாமல் முறைகேடு செய்துள்ளதாக புகார் தெரிவித்துள்ளார்.

| | | ரூபாய் |
|---|---|---|
| • தூய்மைப் பணியாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்த கூட்டுறவு சிக்கன நாணய சங்கக் கடன் | – | 51,38,984/– |
| • தூய்மைப் பணியாளர்கள் மற்றும் அம்மா உணவகத்தில் பணிபுரியும் மகளிர் சுய உதவிக் குழுவினரின் வருங்கால வைப்புநிதி | – | 46,22,199/– |
| • ஒப்பந்ததாரர்களிடம் பிடித்தம் செய்யப்பட்ட வருமானவரி | – | 39,72,960/– |
| • பங்களிப்பு ஓய்வூதிய பிடித்தம் மற்றும் நகராட்சியின் பங்களிப்பு தொகை | – | 3,59,99,000/– |
| • சேமநல நிதி | – | 63,25,404/– |
| மொத்தம் | | 5,60,58,547/– |

**(i) கூட்டுறவு சிக்கன நாணய சங்கக் கடன் பிடித்தம் தொகை:–**

சிவகங்கை நகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன நாணய சங்கத்தில் வாங்கிய தனிநபர் கடனுக்காக அவர்களது ஊதியத்திலிருந்து **01.07.2021** முதல் **30.09.2022** முடிய பிடித்தம் செய்யப்பட்டு சங்கத்தில் செலுத்தாமல் இருப்பதாக மனுதாரர் புகாரில் குறிப்பிடும் நிலுவைத் தொகையான ரூ.**51,38,984/–**ல், ரூ.**9,06,548/–** மட்டுமே நகராட்சியால் செலுத்தப்பட்டுள்ளது, மீதமுள்ள ரூ.**42,32,436/–** சங்கத்தில் செலுத்தப்படாமல் நிலுவையாக உள்ளது என ஆணையரின் அறிக்கையின் மூலம் அறிய முடிகிறது.

நகராட்சி பணியாளர்களின் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யும் இனங்களை குறித்து, நகராட்சி நிர்வாக ஆணையரகத்தால் வெளியிடப்பட்ட "நகராட்சி கணக்கியல் கையேட்டில்" (Municipal Accounting Manual) பத்தி 7.3 (Accounting for Monthly Salary Bills)–ல் "The amounts deducted from the salary of employees, such as PF, LIC etc., shall be remitted to the appropriate authorities before the due dates. Bank Payment Vouchers shall be prepared for these transactions", என தெரிவிக்கப்பட்டுள்ளது."

மேற்காணும் நெறிமுறைகளை பின்பற்றி, ஆரம்ப காலத்திலிருந்தே பிடித்தம் செய்யப்பட்ட தொகை நகராட்சியால் கூட்டுறவு சங்கத்திற்கு உரிய காலத்தில் செலுத்தப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு செலுத்தபடாத காரணத்தினால் கூட்டுறவு சங்கத்தால் விதிக்கப்படும் அபராத வட்டியை சம்பந்தப்பட்ட பணியாளர்களே செலுத்த வேண்டிய நிர்ப்பந்தமான சூழ்நிலை உருவாகும். இது ஏற்புடையதாக இல்லை என்பதால் இதற்கு நகராட்சி ஆணையர் மற்றும் கணக்கு அலுவலர்களே பொறுப்பாவார்கள்.

**(ii) வருங்கால வைப்புநிதி :–**

**2015–16** முதல் **30.09.2022** வரையிலுள்ள காலத்திற்கான பணியாளர்களின் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்ட வருங்கால வைப்புநிதி தொகையான ரூ.**46,30,381/–**ஐ சிவகங்கை நகராட்சியில் பாரத மாநில வங்கியில் பராமரிக்கும் கணக்கிலிருந்து நகராட்சிக்கு தகவல் தெரிவிக்காமல் **3** தவணைகளாக **2022** ஆம் ஆண்டில் மதுரை வருங்கால வைப்புநிதி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதன் மூலம் இந்த இனத்தில் எவ்வித நிலுவையும் இல்லை என்பதை ஆணையரின் அறிக்கையின்மூலம் அறிய முடிகிறது.

இருப்பினும் மேற்காணும் ரூ.**46,30,381/–** தொகையினை வங்கியின் மூலம் முறையே **30.05.2022, 30.06.2022** மற்றும் **03.10.2022** ஆகிய தேதிகளில் பிடித்தம் செய்யப்பட்டதை, சிவகங்கை நகராட்சி ஆணையர் தனது அறிக்கையில் **17.11.2022** அன்றுதான் மதுரை வருங்கால வைப்புநிதி அலுவலகம் மூலம் தொடர்பு கொண்டு உறுதி செய்யப்பட்டுள்ளது என தெரிவிப்பதன் மூலம் நகராட்சி நிதியை கையாளுவதில் நகராட்சி அலுவலர்களின் பொறுப்பற்ற தன்மையை காட்டுகிறது.

**(iii) ஒப்பந்ததாரர்களிடம் பிடித்தம் செய்யப்பட்ட வருமானவரி :–**

**2020–21** முதல் **30.09.2022** வரையிலான காலத்தில் நகராட்சியின் ஒப்பந்ததாரர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்ட வருமானவரி தொகையான ரூ **39,72,966/–**ல், **2020–21** ஆம் ஆண்டிற்கான ரூ **17,08,608/–** தொகை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களின்

வருமானவரி கணக்கில் 15.11.2022 அன்று செலுத்தப்பட்டுள்ளதை ஆணையரின் அறிக்கையின் வாயிலாக அறிய முடிகிறது. மீதமுள்ள ரூ 22,64,358/– சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களின் வருமானவரி கணக்கில் செலுத்தப்படாமல் நிலுவையாக உள்ளது தெளிவாகிறது.

ஒப்பந்ததாரர்களின் பட்டியல் தொகையில் பிடித்தம் செய்யப்படும் வருமானவரி தொகை உடனடியாக அவரவர் வருமானவரி கணக்கில் செலுத்தப்பட வேண்டும். ஆனால் காலதாமதமாகவும் மற்றும் வருமானவரி தொகையினை செலுத்தாமலும் நகராட்சியில் நிலுவையாக வைப்பதால், ஒப்பந்ததாரர்கள் வருமானவரி கணக்கினை குறித்த நேரத்தில் தாக்கல் செய்ய முடியாமல், வருமானவரி துறையால் விதிக்கப்படும் அபராதத் தொகை ஒப்பந்ததாரால் எவ்வாறு ஈடு செய்யமுடியும். மேலும், வருமானவரி கணக்கு தாக்கல் செய்யாமல் இருந்தால் ஒப்பந்ததாரர்கள் மேற்கொண்டு எவ்வித ஒப்பந்தப்புள்ளிகளிலும் பங்கேற்ற தகுதியற்றவர் ஆவர். இச்செயலானது, நகராட்சி அலுவலர்களின் கடமை தவறிய செயலையே காட்டுகிறது.

**(iv) பங்களிப்பு ஓய்வூதிய பிடித்தம் மற்றும் நகராட்சியின் பங்களிப்பு தொகை :– (CPS)**

01.04.2003 முதல் 30.09.2022 வரையிலான சுமார் 19 வருடங்களுக்கு மேல் நகராட்சி பணியாளர்களின் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்ட பங்களிப்பு ஓய்வூதிய பிடித்தம் மற்றும் நகராட்சி பங்களிப்பு தொகை என ஆக மொத்தம் ரூ 3,59,99,000/– தொகை நகராட்சியால் சம்பந்தப்பட்ட கணக்குத் தலைப்பில் செலுத்தப்படாமல், நிலுவையாக வைக்கப்பட்டுள்ளதை ஆவணங்களின் மூலம் அறியமுடிகிறது.

நகராட்சி கணக்கியல் கையேட்டில் (Municipal Accounting Manual) பத்தி 7.4 Accounting for Pension தலைப்பில் கீழ்காணுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

Contributory Pension Fund (CPF) :–

Staff appointed on or after 1st April 2003 have to contribute 10% of pay plus DA towards CPF. An equal contribution amount shall be contributed by the ULB concerned. For deduction in the salary the Pay account is debited and CPF Subscription Recoveries is credited along with other deductions. For remittance of CPF to the concerned Government Authority the CPF Subscription Recoveries and CPF Management Contribution is debited and payment Bank is Credited.

மேற்காணும் கையேட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள நெறிமுறைகள் சிவகங்கை நகராட்சி அலுவலர்களால் பின்பற்றப்படாமல், பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதியபிடித்தம் மற்றும் நகராட்சி பங்களிப்பு தொகை என இந்நாள்வரை சம்பந்தப்பட்ட கணக்கில் செலுத்தாமல் ரூ 3.59 கோடி நிலுவையில் வைத்து இருப்பதால், ஓய்வு பெறும் நகராட்சி பணியாளர்கள் மிகுந்த பாதிப்பிற்குள்ளாவார்கள்.

**(v) சேமநல நிதி :–**

2021–2022 முதல் 30.09.2022 வரையிலான நகராட்சி பணியாளர்களின் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதி மொத்தத் தொகையான ரூ 63,25,404/– நகராட்சியால் உரிய கணக்கில் செலுத்தப்படாமல் உள்ளதன் மூலம், நகராட்சியிலிருந்து பணி ஓய்வு பெறும் சம்பந்தப்பட்ட பணியாளர்கள் பாதிக்கப்படுவார்கள் மற்றும் மிகுந்த மன உளைச்சலை ஏற்படுத்தும்.

இந்நிலையில், சிவகங்கை நகராட்சி பணியாளர்களின் ஊதியத்தியில் பிடித்தங்கள், ஒப்பந்ததாரர்களின் வருமானவரி பிடித்தம் என மொத்தம் ரூ.5,60,58,547/– நகராட்சியால் சம்பந்தப்பட்ட கணக்குகளில் செலுத்தாமல் நிலுவையில் உள்ள தொகையில், (i) கூட்டுறவு சங்கக் கடன் பிடித்தம் ரூ.9,06,548/– (ii) வருங்கால வைப்பு நிதி ரூ.46,30,381/– மற்றும் ஒப்பந்ததாரர்களின் வருமானவரி ரூ.17,08,608/– என ஆக மொத்தம் ரூ.72,45,537/– உரிய கணக்கில் நகராட்சியால் செலுத்தப்பட்டுள்ள நிலையில் மீதமுள்ள ரூ.4,88,13,010/– (ரூ.4.88 கோடி) இன்னும் உரிய கணக்கில் செலுத்தப்படாமல் நிலுவையில் உள்ளது. இதற்கு சிவகங்கை நகராட்சியின் நிதிபற்றாக்குறையே காரணம் என ஆணையர் தெரிவிப்பது ஏற்புடையதல்ல. இந்த நிலுவைத் தொகை ஒரே சமயத்தில் ஏற்பட்டதல்ல. ஆரம்பக் காலத்திலேயே ஊதிய பிடித்தம் சிறிய தொகையாக இருக்கும் போதே உரிய கணக்கில் செலுத்தி இருந்தால் இந்த நிதி சுமை ஏற்பட வாய்ப்பில்லை. ஆனால், இத்தொகை நகராட்சியின் பிறபணிகளுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. இது முறைகேடான செயலாகும். இதனால் தற்போது பணிபுரியும் மற்றும் ஓய்வு பெறவுள்ள நகராட்சி பணியாளர்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள்.

இவ்வாறு ஆரம்ப காலத்திலேயே ஊதிய பிடித்தங்களை உரிய கணக்கில் செலுத்தாமல் இருந்த அப்போதைய மற்றும் தற்போதுள்ள நகராட்சி ஆணையாளர்கள், மேலாளர்கள் மற்றும் கணக்கர்கள் தங்களது பணியில் கடமை தவறியுள்ளதையும், விதிகள் மீறப்பட்டதுள்ளதையும் மற்றும் பொறுப்பற்ற முறையில் பணியாளர்களின் நலனை கருத்தில் கொள்ளாமல் தன்னிச்சையாக செயல்பட்டுள்ளதாக இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. இது கடுமையாகக் கண்டிக்கத்தக்கது.

சிவகங்கை நகராட்சியால் பணியாளர்களின் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்த தொகை மற்றும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து பிடித்தம் செய்த வருமான வரி தொகை என ஆகமொத்தம் சுமார் ரூ 4.88 கோடி சம்பந்தப்பட்ட கணக்குகளில் செலுத்தப்படாமல் நிலுவையில் உள்ள நிலையில், நகராட்சியில் பணிபுரிகின்ற பணியாளர்களுக்கு உரிய வட்டித் தொகை இழப்பும் மற்றும் ஓய்வு பெறுகின்ற பணியாளர்களுக்கு ஓய்வூதிய பணப்பலன்கள் கிடைக்கப்பெறாமல் தங்களது வாழ்வாதாரத்தை இழந்து பெரும் அவதிக்குள்ளாகும் நிலை ஏற்படும். எனவே, நகராட்சி பணியாளர்கள் மற்றும் அவர்கள் சார்ந்த குடும்பத்தினரின் நலத்தினை கருத்திற்கொண்டும், சிவகங்கை நகராட்சியின் நிதிப்பற்றாக்குறை நிலையினை கவனத்தில் கொண்டும், நகராட்சியின் நிதிச்சுமையினை போக்கிடும் வகையில் இதனை ஒரு சிறப்பு இனமாக கருதி சிவகங்கை நகராட்சிக்கு நிதி ஆதாரம் கிடைக்கும் வகையில் அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று துரித நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்ய முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மனுதாரர், திரு.இரா.சோணைமுத்து என்பவர் இம்முறைமன்ற நடுவத்தில் புகார் மனுவினை சமர்ப்பித்தநிலையில், மனுதாரரின் புகார் மனு மீது 01.12.2022 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற நேரடி விசாரணைக்கு அழைக்கப்பட்டும், மனுதாரர் திரு.இரா.சோணைமுத்து என்பவர் விசாரணையில் கலந்து கொள்ளாதது சரியல்ல. இனி வருங்காலங்களில் இத்தகைய போக்கினை தவிர்த்திடுமாறும் மனுதாரரை இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்துகிறது. மேலும் திரு.இரா.சோணைமுத்து என்பவரால் இம்முறைமன்ற

நடுவத்திற்கு அளிக்கப்படும் புகார் மனுக்கள் மீது இம்முறைமன்ற நடுவத்தால் 3 (மூன்று) மாத காலத்திற்கு நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படமாட்டாது என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2022 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 14–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. இரா. சோணைமுத்து,
34/18, தாகூர் தெரு,
சிவகங்கை – 630 561.

2) ஆணையாளர்,
சிவகங்கை நகராட்சி.
சிவகங்கை – 630 561.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவல ர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவத்தின்
அனைத்து பிரிவு அலுவலர்கள்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

15/12/22
செயலாளர்.

15/12/22